[22nd March 1961

SRI T. S. RAMASWAMY : May I know whether the Government Order granting educational concession to children of political sufferers has not been implemented this year?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : The hon. Member may put a separate question to the Hon. Minister for Education.

SRI V. K. KOTHANDARAMAN : இந்தத் தியாகிகளின் குடும்பங்களுக்கு எப்படி இலவசக் கல்விக்காகவேண்டி சர்க்கார் ஏற்பாடு செய்திருக்கிறதோ அதே போன்று மருத்துவ சலுகையும் கொடுக்க வேண்டுமென்று கோரிக்கை வந்திருக்கிறதா ? அது குறித்து சர்க்காரின் அபிப்பிராயம் என்ன ?

THE HON. SRI C. SUBRAMANIAM : இப்பொழுது விஸ்தரிக்கப்பட்டிருக்கிற வசதிகளோடு மேற்கொண்டும் புதிய வசதிகள் செய்வதாக இப்பொழுது உத்தேசம் ஒன்றுமில்லை.

*Agricultural college*

* 1004 Q.—SRI V. K. KOTHANDARAMAN : கனம் உள்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

சாத்தனூர் அணைக்கட்டுக்குப் பக்கத்தில் விவசாயக் கல்லூரி ஆரம்பிக்க உத்தேசமுண்டா ?

THE HON. SRI M. BHAKTAVATASALAM : No, Sir.

* 1005 Q.—SRI T. R. RAMAMIRTHA THONDAMAN : கனம் உள்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) ஆடுதுறையில் விவசாயக் கல்லூரி 1961–62-ல் ஆரம்பிக்க உத்தேசமுண்டா ?

(இ) அதற்காகத் தனியார் துறையில் நிலம் இனமாக கொடுப்பதாக விண்ணப்பம் ஏதேனும் வந்ததா?

(உ) அதன்மேல் எடுத்த முடிவு என்ன ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) No, Sir.

(*b*) Yes, at Kabistalam in Thanjavur district.

(*c*) No decision has been taken yet.

SRI T. R. RAMAMIRTHA THONDAMAN : ஆடுதுரையில் ஒரு விவசாயக் கல்லூரியை ஆரம்பிக்க வேண்டுமென்று நீண்டகாலமாக வற்புறுத்தப்பட்டு வருகிறது. அதை ஆரம்பிப்பதற்கு நிலம் தருவதாக, கபிஸ்தலத்திலிருந்து திரு. கருப்பைய மூப்பனர் அவர்கள் மனுக்கள் போட்டிருப்பதாக பத்திரிகைகளில் பார்த்தோம். தவிர உற்பத்தித் திட்டங்கள் போன்றவைகள் அமுலாகும் பிரதேசங்களில், அப்படிப்பட்ட ஒரு விவசாயக் கல்லூரி ஏற்படுத்துவது அவசியம். கனம் அமைச்சர் அவர்கள் ரஷ்யாவிற்குச் சென்று அங்கு இப்படிப்பட்ட விவசாயக் கல்லூரிகளில் ஏராளமான மாணவர்கள் பயிலுகிறுர்கள் என்று சொன்ஞர். ஆகவே அங்கு விவசாயக் கல்லூரி அமைக்க சர்க்கார் முன்வருமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : கபிஸ்தலத்தில் நிலம் அளிக்க முன்வந்தது பற்றி பரிசீலனை செய்யப்பட்டு வருகிறதென்று சொன்னேன். நிலம் மட்டும் போதாது, ஒரு விவசாயக் கல்லூரி அமைப்பதற்கு. தஞ்சையில் வேண்டுமென்றுல், பக்கத்திலுள்ள சிதம்பரத்தில் அண்ணுமலை யூனிவர்ஸிட்டியில் ஒரு விவசாயக் கல்லூரி இருக்கிறது. மூன்றுவது திட்டத்தில் மற்றும் ஒரு கல்லூரி அமைக்க திட்டமிருக்கிறது. எங்கு அமைப்பது, மதுரையில் அமைப்பதா, தஞ்சாவூரில் அமைப்பதா, வேறு எங்கே அமைப்பது என்று பரிசீலனை செய்து முடிவு செய்யப்பட வேண்டிய விஷயம்.